நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
02.07.2024

# தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு: அதிகாரிகளுக்கு எதிராக கொலை வழக்கு

**சென்னை, ஜூலை 1:** தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரிகள் எவரும் இதுவரை வருந்தவில்லை எனவும், அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த தேசிய மனித உரிமை ஆணையம், வழக்கை முடித்து வைத்து பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர் - செந்தில்குமார் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, வழக்கில் எதிர் மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்த தூத்துக்குடி துணை காவல் கண்காணிப்பாளர் லிங்க திருமாறன் தரப்பில், 'மனித உரிமை ஆணைய சட்டத்தின் படி ஏற்கெனவே முடிக்கப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாது. மாநில மனித உரிமை ஆணையமும், நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையமும் விசாரித்த வழக்கை மீண்டும் விசாரிக்க முடியாது' என வாதிட்டார்.



இந்த வாதத்தை மறுத்த மனுதாரர் ஹென்றி திபேன், 'மனித உரிமை ஆணைய சட்டப்படி மனித உரிமை ஆணையங்கள் பிறப்பிக்கும் உத்தரவை மறு ஆய்வு செய்ய முடியும். அந்த வகையில் தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பான வழக்கை மீண்டும் விசாரிக்க எந்தத் தடையும் இல்லை' என வாதிட்டார்.

சிபிஐ தரப்பில், 'துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பான வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் சிபிஐ சார்பில் கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை சிபிஐ சிறப்பு நீதிமன்றம் விசாரிக்கும். மனுதாரருக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லை என ஆட்சேபணை தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதிகள், 'மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. நடந்த சம்பவத்துக்கு இதுவரை எந்த அதிகாரிகளும் வருந்தவில்லை. அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு பதிய வேண்டும். துப்பாக்கிச்சூடு நடத்த உத்தரவிட்டது யார், யார் இதற்கு பொறுப்பேற்பார்கள் என கேள்வி எழுப்பினர்.

தொடர்ந்து, எதிர்மனுதாரர்களின் ஆட்சேபணைக்கு பதில் அளிக்கும்படி மனுதாரர் ஹென்றி திபேனுக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை 15-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.